## September 14, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மாநில பசட்டப்பேரவை மற்றும் மேலவைகளின் செயல்பாடு அடிப்படையில் தேசிய சட்டப்பேரவை தரவரிசையை உருவாக்க வேண்டும் என்று மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தெரிவித்தார்.
    i. கர்நாடக சட்டப் பேரவை ஏற்பாடு செய்திருந்த காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் இந்திய பிராந்திய மாநாட்டில், ஜனநாயக அமைப்புகள் மீதான மக்களின் நம்பிக்கையை உயர்த்துவதற்கு சட்டப்பேரவைக் கூட்டங்களின்போது ஏற்படும் இடையூறுகள், அவையின் நடவடிக்கை முடக்கம் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்;
    ii. நாடாளுமன்றத்தின் உதவியுடன் சட்டப் பேரவை மற்றும் மேலவைகளின் ஆராய்ச்சிப் பிரிவின் செயல்பாடுகளை மேம்படுத்த வேண்டும்;
    iii. சட்டப்பேரவையின் செயல்பாடுகளில் தொழில்நுட்பத்தை அதிகளவில் பயன்படுத்த வேண்டும்;
    iv. சட்டப்பேரவையின் செயல்பாடுகளில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
2. சீனாவில் நடைபெறும் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் ஈஷா சிங், 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார். போட்டி இறுதிக் கட்டத்தை நெருங்கியிருக்கும் நிலையில், இதுவே இந்தியாவுக்கு முதல் பதக்கமாகும்.
3. தனியார் நிலங்களில் சந்தன மரங்களை வெட்டி விற்பனை செய்ய அனுமதிக்கும் மசோதாவுக்கு கேரள அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
    i. 'கேரள வனத் திருத்தச் சட்ட மசோதா 2025' என்ற இந்த மசோதாவுக்கு மாநில முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் நடைபெற்ற சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது'என்று முதல்வர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.
    ii. இதுகுறித்து மாநிலவனத்துறை அமைச்சர் ஏ.கே.சசீந்திரன் கூறிய தாவது: தற்போது, தனியார் நிலங்களில் வளர்க்கப்படும் சந்தன மரம் திருடு போனாலும், நில உரிமையாளர் மீதே வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. இதன் காரணமாக, சந்தன மரத்தை நட்டுவளர்க்கயாரும் முன்வருவதில்லை. இந்தநிலையை மாற்றும் வகையில், மாநில அரசு இந்தச் சட்டத் திருத்தத்தை மேற்கொள்கிறது. அதன்படி, தனியார் நிலங்களில் வளர்க்கப்படும் சந்தன மரங்களை நில உரிமையாளர்கள் வெட்டி வனத்துறை மூலம் விற்பனை செய்ய அனுமதிக்கப்படுவர். வனத் துறை அனுமதியின்பேரில் மட்டுமே இந்த விற்பனையை செய்ய முடியும்.
    iii. இது, மாநிலத்தில் சந்தன மர சாகுபடியை ஊக்குவிப்பதோடு, நில உரிமையாளர்களின் வருவாயும் மேம்படும். சந்தன மர திருட்டு பிரச்னைக்கும் தீர்வு கிடைக்கும். அதே நேரம், அரசுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் வளரும் சந்தன மரங்களை வெட்ட அனுமதிக்கப்படாது.
    iv. தற்போதைய சந்தை நிலவரப்படி சந்தன மரம் தரத்தைப் பொறுத்து ஒரு கிலோ ரூ. 4,000 முதல் ரூ.7,000 வரை விலை போகிறது என்றார்.
4. ரஷியாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை 'நேட்டோ' நாடுகள் அனைத்தும் நிறுத்த வேண்டும்; ரஷியாவிடமிருந்து பெட்ரோலியம் வாங்கும் சீனா மீது 50 முதல் 100 சதவீத வரியை நேட்டோ நாடுகள் விதிக்க வேண்டும். இதன் மூலம் ரஷியா-உக்ரைன்

போரை நிறுத்த முடியும் என்று நம்புகி mறேன்' என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

5. நேபாளத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்த அதிபர் ராமசந்திர பௌடேலின் முடிவுக்கு அரசியல் கட்சிகள் கடும் கண்டனத்தைப் பதிவு செய்தன.
   i. ராமசந்திர பௌடேலின் முடிவுகள் அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது எனவும், இது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நடவடிக்கை எனவும் அந்தக் கட்சிகள் விமர்சித்தன.
   ii. முன்னதாக, கடந்த நேபாள இடைக்கால பிரதமராக பதவியேற்ற பின் சுசீலா கார்கி தலைமையில் நடைபெற்ற முதல் அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில், நாடாளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் அவையைக் கலைக்க அதிபருக்கு பரிந்துரை வழங்கப்பட்டது. இதற்கு அதிபர் ராமசந்திர பௌடேல் ஒப்புதல் அளித்தார்.
   iii. இதையடுத்து, செப்.12 முதல் மக்கள் பிரதிநிதிகள் அவை கலைக்கப்பட்டதாக அதிபர் மாளிகை அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், 2026, மார்ச் 5-ஆம் தேதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டது.

6. மிஸோரமின் முதல் ரயில் வழித்தடத்தை (பைரபி-சாய்ராங்) திறந்துவைத்த பிரதமர் மோடி, தலைநகர் ஐஸாலுக்கு நேரடி ரயில் சேவைகளையும் தொடங்கிவைத்தார்.
   i. அஸ்ஸாம் எல்லையில் உள்ள பைரபி மற்றும் தலைநகர் ஐஸால் அருகே உள்ள சாய்ராங் இடையே 51.38 கி.மீ. தொலைவு கொண்ட இந்த வழித்தடம், ரூ.8,070 கோடி செலவில் கட்டமைக் கப்பட்டுள்ளது.
   ii. 45 சுரங்கங்கள், 55 பெரிய பாலங்கள், 87 சிறிய பாலங்களுடன் கூடிய பைரபி-சாய்ராங் வழித்தடம், நாட்டின் பிற பகுதிகளுடன் தலைநகர் ஐஸாலுக்கு ரயில் இணைப்பை வழங்குகிறது. இதன் மூலம் நாட்டின் ரயில்வே கட்டமைப்புடன் மிஸோரம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
   iii. சாய்ராங் அருகே உள்ள 144-ஆவது எண் பாலத்தின் உயரம் 114 மீட்டர். இது குதுப்மினாரைவிட உயரம் அதிகம்.

7. 'நாடு முழுவதும் சீரான இடைவெளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக பிறப்பிக்கப்படும் எந்தவொரு உத்தரவும் தமது பிரத்யேக அதிகார வரம்பை மீறு வதாக அமையும்' என்று உச்ச நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
   i. மேலும், 'எந்தவொரு அதிகாரத்தையும் புறந்தள்ளி, வாக்காளர் பட்டியல் திருத்தக் கொள்கையை நிறைவேற்ற தமக்கு முழுமையான விருப்புரிமை உள்ளது' என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
   ii. பிகார் மாநில வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. இதில் முதல் கட்டமாக, அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலைச் சந்திக்க உள்ள தமிழகம், அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரி மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் நிகழாண்டு இறுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

8. மத்திய அரசு கொண்டுவந்த வக்ஃப் திருத்தச் சட்டத்துக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் திங்கள்கிழமை (செப்.15) இடைக்கால உத்தரவை அளிக்க உள்ளது.
   i. இது தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றத் தலைமை நீதி பதி பி.ஆர். கவாய் தலைமையிலான அமர்வு இருதரப்பு வாதங்களைக் கேட்ட பின்பு கடந்த மே 22-

ஆம் தேதி உத்தரவை ஒத்தி வைத்தது.

ii. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வக்ஃப் திருத்தச் சட்டத்துக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவின் ஒப்புதல் பெற்று மத்திய அரசு கடந்த ஏப்ரல் மாதம் அமல்படுத்தியது.

iii. இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட 70-க்கும் மேற்பட்ட மனுக்களைப் பரிசீலித்த உச்சநீதிமன்றம், அதில் 5 மனுக்களை மட்டும் விசாரணைக்கு ஏற்றது. அப்போது, மூன்று அம்சங்களுக்கு மட்டும் தடை விதிப்பது குறித்து விசாரித்தது.

   a) அதாவது, நீதிமன்றங்களால் அறிவிக்கப்பட்ட வக்ஃப் சொத்துகள், மரபு வழியாகப் பயன்படுத்தப்படும் வக்ஃப் சொத்துகள், பத்திரத்தின்படி அறிவிக்கப்பட்ட வக்ஃப் சொத்துகள் ஆகிய வற்றை ரத்து செய்ய அரசமைப்புச் சட்டத்தின்படி அதிகாரம் உள்ளதா?
   b) மாநில வக்ஃப் வாரியங்கள், மத்திய வக்ஃப் கவுன்சில் ஆகியவற்றில் பதவி உறுப்பினர்களைத் தவிர முஸ்லிம்களே இடம் பெற வேண்டும்.
   c) வக்ஃப் சொத்துகளை மாவட்ட ஆட்சியர் விசாரணை மேற்கொண்டு, அரசு சொத்தா என அறிவிக்கப்படும் வரை, அது வக்ஃப் சொத்தாக கருதப்படாது ஆகிய மூன்று சட்ட அம்சங்கள் குறித்து உச்சநீதிமன்றம் விசாரித்தது.

iv. அப்போது, மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, 'வக்ஃப் என்பது மதச்சார்பற்ற கருத்தாகும்; அதை அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானதாக கருதி தடை விதிக்க முடியாது. இஸ்லாத்தில் வக்ஃப் கட்டாய நடைமுறையல்ல' என்று வாதிட்டார்.

v. மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் கபில் சிபல், 'நீதிமன்ற நடைமுறைகளின்றி வக்ஃப் சொத்துகளைக் கையகப்படுத்த மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை இது' என்று வாதிட்டார்.